# அகிலன் பிறந்ததின... (04ஆம் பக்கத் தொடர்)

வழக்கறிஞர் அருள்மொழி, எழுத்தாளர் தமிழ்மகன், எம்.எஸ். பெருமாள், கலாப்ரியா, பழனிபாரதி, பிருந்தாசாரதி, கபவீரபாண்டியன் ஆகியோரும் மறைத்திரு தோமஸ் அமிர்தம் (லயோலா கல்லூரி முதல்வர்), மறைத்திரு. ஜெயராஜ் (செயலர் லயோலா கல்லூரி) சகாயராஜ், பேராசிரியர் அமல்ராஜ் (தமிழ்த்துறைத் தலைவர் லயோலா கல்லூரி) போன்ற பெரியோர்களும் கருத்தரங்கில் உரை ஆற்றினர். இலக்கியச் சிற்றேடுகளின் நவீன இலக்கிய உலகைச் சார்ந்தவர்களும், அகிலனின் அரசியல் கொள்கைகளுக்கு எதிரான சிந்தனை வகுப்பைச் சார்ந்தவர்களும் பங்கேற்று தங்கள் உள்ளத்திலிருந்து அகிலனைப் பற்றிப் பேசினார்கள்.